புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 302 · 07-05-2026 · வியாழன் · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி- புதுச்சேரி
Volum 01 · Issue: 302 · 07-05-2026 · Thursday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy-Puducherry

## பிஹார் மாநில அமைச்சரவை இன்று விரிவாக்கம்: பிரதமர் மோடி பங்கேற்பு

பாட்னா: மே.7–

பிஹாரில் ஐக்கிய ஜனதா தளம், பாஜக கூட்டணியில் முதல்வர் நிதிஷ் குமார் மாநிலங்களவை எம்.பி.யானார். இதனால் முதல்வராக பாஜக மூத்த தலைவர் சாம்ராட் சவுத்ரி பிஹாரின் புதிய முதல்வராக பதவியேற்றார்.

ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த பிஜேந்திர பிரசாத் யாதவ், விஜய் குமார் சவுத்ரி ஆகியோர் துணை முதல்வர்களாகப் பதவியேற்றனர்.

இந்த சூழலில் பிஹார் அமைச்சரவை நாளை விரிவாக்கம் செய்யப்படுகிறது.

பாஜகவை சேர்ந்த 12 பேர், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த 11 பேர், லோக் ஜன சக்தி (ராம் விலாஸ்) கட்சியை சேர்ந்த 2 பேர், இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா, ராஷ்டிரிய லோக் மோர்ச்சா கட்சிகளை சேர்ந்த தலா ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பிஹார் தலைநகர் பாட்னாவில் புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது குறித்து பிஹார் பாஜக தலைவர் சஞ்சய் சரோகி கூறும்போது, ”மே 7ம் தேதி நடைபெறும் அமைச்சரவை விரிவாக்க விழாவில் பிரதமர் மோடி, தேசிய தலைவர் நிதின் நவீன், அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்” என்றார்.

## வர்த்தக ஒத்துழைப்பு: இந்தியா - ஜமைக்கா ஒப்பந்தம்

கிங்ஸ்டன்: மே.7–

இந்தியா மற்றும் ஜமைக்கா நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. ஜமைக்கா நாட்டுக்கு 9 நாள் பயணமாகச் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் காமினா ஜே.ஸ்மித்தை திங்கள்கிழமை சந்தித்து விரிவாகப் பேசினார்.



அதன் பின்னர் செய்தியாளர்களிடம் ஜெய்சங்கர் கூறியதாவது: டிஜிட்டல் பரிமாற்றம், கலாச்சாரம், விளையாட்டு மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை ஆகிய துறைகளில் சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கரீபியன் நாடுகளுக்கான வர்த்தக நுழைவாயிலாக ஜமைக்கா திகழ்கிறது. இந்நாட்டின் கிட்சன் நகரில் இந்திய உதவியுடன் ஊரக வாழ்வாதாரத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட ஜமைக்காவிற்கு மனிதாபிமான அடிப்படையில் 30 டயாலிசிஸ் இயந்திரங்கள், 40 மீன்பிடிப் படகுகள் மற்றும் 200 ஜிபிஎஸ் கருவிகளை இந்தியா வழங்கி வருகிறது. மேலும், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 202829 காலகட்டத்திற்கு இந்தியா தற்காலிக உறுப்பினராக ஜமைக்கா அளிக்கும் ஆதரவை வரவேற்கிறோம். இவ்வாறு அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

## தமிழக ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்

சென்னை: மே.7–

தமிழக ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை ஆளுநர் மாளிகையில் சந்தித்து, தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தவெக தலைவர் விஜய், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை பிற்பகல் 3.30 மணி அளவில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அவருடன் செங்கோட்டையன், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்டோர் உடன் சென்றிருந்தனர்.



விஜய்யை வரவேற்ற ஆளுநர் அர்லேகர், அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதையடுத்து, விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

பதவியேற்பு விழாவை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நாளை காலை 11.30 மணி அளவில் பிரம்மாண்டமாக நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. முதல்வராக விஜய் நாளை பதவியேற்பார் என்று கூறப்படுகிறது.

அவருடன் அமைச்சர்களும் பதவியேற்க உள்ளனர். அமைச்சரவையில் செங்கோட்டையன், ஜேசிடி. பிரபாகர், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல்குமார், மரிய வில்சன், ராஜ்மோகன், அருண்ராஜ், சத்தியபாமா, விஜயலட்சுமி, ஸ்ரீநாத் உள்ளிட்டோர் இடம்பெற வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகளின் ஆதரவை விஜய் கோரி இருந்தார். காங்கிரஸ் கட்சி 5 தொகுதிகளிலும், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகியவை தலா 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதால், இக்கட்சிகள் இணைந்தால் பெரும்பான்மையை எளிதில் பெற முடியும்.

விஜய்யின் கோரிக்கையை ஏற்று, தவெகவுக்கு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி இன்று அறிவித்தது. இது தொடர்பாக அக்கட்சியின் தமிழக பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவை வழங்குமாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு தவெக தலைவர் விஜய் முறைப்படி கோரிக்கை விடுத்திருந்தார். இதை ஏற்று, தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்கு முழு ஆதரவை வழங்க காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. எந்தவொரு வகுப்புவாத சக்தியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்காமல் தமிழக வெற்றி கழகம் விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆதரவு வழங்கப்படுகிறது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை, அவரவர்க்கு உரிய பங்கு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கூட்டணி, தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களிலும் தொடரும்” என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராஜேஷ் குமார், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் விஜய்யை பனையூர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகள் தவெக கூட்டணியில் இணைவது குறித்து தங்கள் கட்சியினருடன் ஆலோசித்து தெரிவிப்பதாக கூறியுள்ளனர். அதிமுக தரப்பிலும், விஜய்க்கு ஆதரவு அளிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

## தவெக ஆட்சி அமைக்க காங்கிரஸ் நிபந்தனையுடன் ஆதரவு

சென்னை: மே.7–

தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மதவாத சக்திகளுக்கு ஆதரவாக செயல்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் திமுக உடனான காங்கிரஸ் கூட்டணி முடிவுக்கு வந்துள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. அக்கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனினும், இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள விஜய், அதில் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, தவெகவின் பலம் 107 ஆக குறையும்.

சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், தவெகவுக்கு கூடுதலாக 11 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. தற்போது காங்கிரஸ் தரப்பிலிருந்து 5 எம்எல்ஏக்கள் ஆதரவு கிடைத்துள்ள நிலையில், இன்னும் 6 எம்எல்ஏக்கள் தேவைப்படுகின்றனர். இந்தச் சூழலில் அடுத்த ஆதரவு விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

அதேபோல் தேசிய அளவில் இண்டியா கூட்டணியில் காங்கிரஸ், திமுக இருக்கும் நிலையில், அடுத்துவரும் உள்ளாட்சி தொடங்கி மக்களவைத் தேர்தல் வரை தவெக உடனான கூட்டணி தொடரும் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளதால் இண்டியா கூட்டணியில் அடுத்து என்ன நடக்கும் என்பது குறித்து விவாதங்கள் எழுதுள்ளன.

காங்கிரஸ் அறிக்கை சொல்வது என்ன?

தமிழ்நாடு காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவை வழங்குமாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு தவெக தலைவர் விஜய் முறைப்படி கோரிக்கை விடுத்திருந்தார்.

அரசியலமைப்பு கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்ட, மதச்சார்பற்ற, முற்போக்கான, மக்கள் நலன் சார்ந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான மிகத் தெளிவான, வலுவான, மகத்தான தீர்ப்பை தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக இளைஞர்கள் வழங்கியுள்ளனர். அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கு விஜய் தலைமையில் இயங்கும் தமிழக வெற்றி கழகத்தையே அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, இந்தியாவில் மதச்சார்பற்ற, முற்போக்கான, மக்கள் நலன் சார்ந்த அரசியலின் அடித்தளமாகத் திகழ்வதுடன், அத்தகைய அரசியலுக்காகவே உறுதியாக நிற்கிறது. தமிழ்நாட்டு மக்கள்



வழங்கிய இந்தத் தேர்தல் ஆணையை மதிப்பதும், அதனை நிலைநிறுத்துவதும், அதனைச் செயல்படுத்த உதவுவதும் நமது அரசியலமைப்பு கடமையாகும்.

அதற்கிணங்க, தமிழக காங்கிரஸ் கமிட்டியும், காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியும், தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்குத் தங்களது முழு ஆதரவை வழங்க முடிவெடுத்துள்ளன.

இந்திய அரசியலமைப்பின் மீது நம்பிக்கை இல்லாத எந்தவொரு வகுப்புவாத சக்தியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்காமல் தமிழக வெற்றி கழகம் விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டே எங்களது ஆதரவு வழங்கப்படும்.

தமிழக வெற்றி கழகத்திற்கும் தமிழக காங்கிரஸுக்கும் இடையிலான இந்தக் கூட்டணி, வரும் பல பத்தாண்டுகளுக்கு தந்தை பெரியாரின் சமூக நீதி கொள்கைகள், பி.ஆர். அம்பேத்கரின் அரசியலமைப்பு கொள்கைகள் மீது உறுதியான பற்றுறுதியுடன் செயல்பட்டு, பெருந்தலைவர் காமராஜரின் பொற்காலத்தை தமிழ்நாட்டில் மீண்டும் கொண்டுவரப் பாடுபடும்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை, உரிய பங்களிப்பு மற்றும் பகிரப்பட்ட பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கூட்டணி, தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களுக்கும் பொருந்தும்.

ஒரு மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கான அரசாங்கத்தை அமைப்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை மதித்து நடப்போம் என்றும், தமிழ்நாட்டு மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கனவுகளையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம் என்றும் விஜய் மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் கூட்டாக உறுதியளிக்கின்றனர்” என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அகில இந்திய காங்கிரஸ் அமைப்புப் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், “தமிழகத்தில் ஆட்சியமைக்க ஆதரவு கோரி இந்திய தேசிய காங்கிரஸிடம் தவெக தலைவர் விஜய் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழகத்தில் அரசியலமைப்பை அதன் உணர்வின் படி பாதுகாக்க உறுதிபூண்ட ஒரு மதச்சார்பற்ற அரசாங்கத்துக்கே மக்கள் அதிகாரம் அளித்துள்ளனர். இதில் காங்கிரஸ் தெளிவாக இருக்கிறது.

எந்த வகையிலும் பாஜகவும், அதன் கைப்பாவைகளும் தமிழக அரசை நடத்துவதை காங்கிரஸ் அனுமதிக்காது என்பதிலும் உறுதியாக உள்ளது. அதன்படி, தேர்தல் தீர்ப்பில் பிரதிபலித்துள்ள மாநிலத்தின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, விஜய்யின் கோரிக்கை மீது இறுதி முடிவு எடுக்குமாறு தமிழக காங்கிரஸ் கமிட்டிக்கு காங்கிரஸ் தலைமை உத்தரவிட்டுள்ளது” என தெரிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

‘முதுகில் குத்தும் செயல்’ திமுக

இதனிடையே, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என காங்கிரஸ் எடுத்துள்ள முடிவு, திமுகவின் முதுகில் குத்தும் செயல் என்று திமுக செய்தித் தொடர்பாளர் சரவணன் அண்ணாதுரை விமர்சித்திருந்தார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த சரவணன் அண்ணாதுரை, “தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என்ற முடிவை காங்கிரஸ் கட்சி எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாடு மிகவும் குறுகிய பார்வை கொண்டது; தொலைநோக்கு அற்றது.

இப்படி ஒரு முடிவை எடுப்பதற்காக அவர்கள் வருந்த நேரிடும். 2029 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த தேர்தலில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்றிவிட முடியும் என நாங்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தோம்.

ஆனால், காங்கிரஸ் இப்போது எடுத்துள்ள இந்த முடிவு காரணமாக, அவர்கள் ஒரு நிலையற்ற கூட்டணி கட்சியாக மாறிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சியை நம்ப முடியாது என்ற ஒரு கருத்து நாடு முழுவதும் பரவியுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு நாள்தான் ஆகிறது. அதற்குள் காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு அளிக்க முடிவு செய்திருப்பது, முதுகில் குத்தும் செயல்” என தெரிவித்திருந்தார்.

‘திமுக பேச்சு புலம்பல்’

தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைப்பது குறித்து மாணிக்கம் தாகூர் கூறும்போது, “திமுக, அதிமுக முன்வைக்கும் அதே அரசியல் கருத்துகளைத்தான், கொள்கைகளைத்தான் தவெகவும் முன்வைக்கிறது.

எம்ஜிஆர், கருணாநிதி என்ன அரசியலை பேசினார்களோ அதே அரசியலைத்தான் விஜய்யும் பேசுகிறார். எங்களைப் பொறுத்தவரை, இந்த மண் பாஜகவுக்கு எதிரான மண்; ஆர்எஸ்எஸ் அமைப்புக்கு எதிரான மண்; இந்த மண் வெறுப்பு அரசியலுக்கு எதிரான மண் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

எங்களைப் பொருத்தவரை காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அரசியல் விவகாரக் குழு முடிவெடுத்திருக்கிறது. திமுகவின் சரவணன் போன்றவர்கள் கூறி இருப்பது புலம்பல்” என்றார்.

# வந்தவாசியில் 'செகண்ட் இன்னிங்ஸ்' குறும்படம் வெளியீடு: புதுவை தமிழ்ச் சங்க தலைவர் கலைமாமணி வி.முத்து தொடங்கி வைத்தார்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பத்மாவதி திரையரங்கில் ஓய்வுபெற்ற இரயில்வே சு.தனசேகரன் நடித்த 'செகண்ட் இன்னிங்ஸ்' குறும்படம் வெளியீட்டு விழா நடைபெற்றது. இயக்குநர் இ.வி.கணேஷ்பாபு இயக்கிய இப்படத்தை புதுவை தமிழ்ச் சங்க தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று வாழ்த்தி தொடங்கி வைத்தார். இயக்குநர் இ.வி.கணேஷ் பாபு, ஒளிப்பதிவாளர் என்கே.ராஜராஜன், உதவி இயக்குநர்கள் வந்தை பிரேம், வந்தை குமரன், முகமது ஜியா உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மேலும் பிருதூர் முன்னாள் தலைவர் ஆர்.செல்வக்குமார், சார்பதிவாளர் ரமேஷ், தலைமை ஆசிரியர் க.வாசு, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், ஓய்வுபெற்ற கருவூல அதிகாரி சத்யா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் குறும்படத்தில் நடித்த வந்தவாசி பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர். இறுதியில் குறும்பட நாயகன் சு. தனசேகரன் நன்றி கூறினார்.

# காங்கயம் தொகுதியில் முன்னாள் செய்தித் துறை அமைச்சர் மூன்றாமிடம்!!

திருப்பூர், மே 7

தமிழகம் முழுதும் த.வெ.க. வீசிய அலையால், அமைச்சர் பலர் தோல்வியை சந்தித்தனர். காங்கயம் தொகுதியில் போட்டி யிட்ட செய்தித் துறை அமைச்சர் மூன்றாமிடத்துக்கு தள்ளப்பட்டார்.

திருப்பூர் மாவட்டம், காங்கயம் தொகுதி அமைச்சர் தொகுதி என்பதால், வி.ஐ.பி தொகுதியாக கருதப்பட்டது.



இத்தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ. நடராஜ் போட்டியிட்ட நிலையில், சிட்டிங் அமைச்சர் சாமிநாதனுக்கு மீண்டும் சீட் வழங்கியது.

நேற்று நடந்த தி.மு .க ஓட்டு எண்ணிக்கையில், வேட்பாளர் நடராஜ், 70 ஆயிரத்து, 753 ஓட்டுக்கள் வெற்றி பெற்றார்.

த.வெ.க. வேட்பாளர் மணிக்கவுண்டர், 62 ஆயிரத்து, 815 ஓட்டுக்களை பெற்று, இரண்டாமிடம் பிடித்தார்.

சிட்டிங் தொகுதியில் போட்டியிட்ட அமைச்சர் சாமிநாதன், 58 ஆயிரத்து, 931 ஓட்டுக்களை பெற்று மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

முதலிடம் பெற்ற அ.தி.மு.க. வேட்பாளரை விட, 6,983 ஓட்டுக்கள் குறைவாக பெற்றதால், த.வெ.க. இரண்டாமிடம் பெற்றது.58,931 ஓட்டுக்கள் தி.மு.க. மூன்றாமிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2027ஆம் ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பத்ம விருதுக்கு தகுதியானவர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பிப்பதற்கான வழிமுறைகள்

## மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.

கள்ளக்குறிச்சி மே 07

விருதுக்கு பரிந்துரைக்கப்படும் நபர்கள், சாதனைகளில் பொது சேவையின் ஒரு அங்கமாக இருப்பது அவசியம். தேர்வுக்கான அளவுகோல்கள் "மீஜ் நீமீநீநீமீஸீநீமீ ஜீநீஷு்வ" ஆக இருக்க வேண்டும். பத்ம விருதுகள் உலகின் இரண்டாவது விருதாக இருப்பதால், ஏதாவது ஒரு துறையில் தேசிய விருது அல்லது மாநில விருது பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். விருதுக்கு பரிசீலிக்க தகுதியான நபர்கள் சமுதாயத்தில் சிறந்து விளங்கும் திறமை கொண்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், சிறப்புப்பிரிவு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.



பொதுவாக இவ்விருது மரணத்திற்கு பிறகு வழங்கப்படுவதில்லை. இருந்தபோதிலும், தகுதியான சந்தர்ப்பங்களில், சிறந்த சேவை புரிந்து மரணமடைந்தாலும், ஒரு வருட காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம். குறிப்பிட்ட துறைகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சேவை புரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இருப்பினும் தகுதியான சந்தர்ப்பங்களில் விதிவிலக்காக தளர்வு செய்யப்படும். மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகளைத் தவிர பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், அரசு ஊழியர்கள் பத்ம விருதுக்கு தகுதியற்றவர்கள்.

விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள்.31.07.2026. இவ்விருதுக்கு இணையதளம் மூலம் தகுதியான நபர்கள் விண்ணப்பித்திருந்தால், உரிய கருத்துருவினை, அறை எண்.623 மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் 606 207 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

# விசில் சத்தத்திலும் வெற்றி வாகை சூடிய ஹரி பாஸ்கர்... அந்தியூர் தொகுதி அதிமுக கோட்டை என மீண்டும் தெரிவித்தார்...




ஈரோடு. மே. 07

அந்தியூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட ஹரி பாஸ்கர் வெற்றி பெற்றுள்ளார். அந்தியூர் தொகுதி அதிமுக போட்ட என ஹரி பாஸ்கர் நிரூபித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில், ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட ஹரி பாஸ்கர் அபார வெற்றி பெற்றுள்ளார்.

இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் சிவபாலன் மற்றும் தமிழக வெற்றி கழக வேட்பாளர் விஜய் வெங்கடேஷ் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி தொடர்ந்து முன்னிலை வகுத்து வந்த நிலையில் இறுதியில் அபார வெற்றி பெற்றுள்ளார்.

அந்தியூர் தொகையில் வெற்றி பெற்ற ஹரி பாஸ்கருக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் கட்சியினர் பொதுமக்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வெற்றி பெற்ற வெற்றி சான்றிதழை பெற்றுக்கொண்டு ஹரிபாஸ்கர் சென்னை சென்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேரு சந்தித்து ஆசி பெற்றார்.

# திருவள்ளூர் மாவட்ட பிரிவு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், முதன்மை நிலை விளையாட்டு மையம் மாணவர்கள் சேர்க்கை

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் மே 07 : பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் விளையாட்டு துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 06 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இம்முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கைக்கான தகவல் மற்றும் விண்ணப்பப்படிவம் 08.04.2026 முதல் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. இம்முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர விருப்பமுள்ள 6. 7 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

ஆன்லைன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பதிவு ஏற்றம் செய்வதற்கான கடைசி நாள்: 11.05.2026 அன்று மாலை 6.00 மணி ஆகும். தேர்வுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர விரும்பும் மாணவ,மாணவியருக்கான நேரடி மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் வருகின்ற 12.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் கீழ்காணும் விவரப்படி நடைபெற இருப்பதால் ஆன்லைனில் விண்ணப்பித்தவர்கள் மட்டுமே தவறாது கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.



அதன்படி டென்னிஸ் (மாணவியர்கள்), மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்:நுங்கம்பாக்கம், விளையாட்டரங்கம் சென்னை 34, மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்: 12.05.2026 அன்று காலை 7.00 மணி முதல்.

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ் (மாணவர்கள், மாணவியர்கள்), மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: AGB நீச்சல் குள வளாகம் வேளச்சேரி, சென்னை 42, மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7.00 மணி முதல்.

விளையாட்டு:வில்வித்தை (மாணவர்கள் , மாணவியர்கள்), சைக்கிளிங் ( மாணவர்கள் , மாணவியர்கள்), இறகு பந்து ( மாணவர்கள், மாணவியர்கள்), கனோயிங் மற்றும் கையாக்கிங் (மாணவர்கள்), மேசைபந்து (மாணவர்கள், மாணவியர்கள்), மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர், செங்கல்பட்டு (TNPESU), மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7.00 மணி முதல்.

நேரடி மாநில அளவிலான தேர்வு போட்டிகளில் தகுதி பெற்றவர்களின் விவரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in எனும் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.தேர்வு போட்டியில் கலந்து கொள்ள வருகிறவர்களுக்கு தங்குமிடவசதி, பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் மற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். அனைவரும் முதன்மை நிலை விளையாட்டு மைய தேர்வு போட்டியில் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

# ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில் கோடைக்கால பயிற்சி வகுப்புகள் தொடக்கம்..!



வந்தவாசி, மே 07:

திருவண்ணாமலை மாவட்டம்,வந்தவாசியில் தமிழக அரசின் கலை பண்பாட்டு துறை சார்பில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் செயல்பட்டு வரும் ஜவகர் சிறுவர் மன்றத்தில் கோடைகால சிறப்பு பயிற்சி வகுப்புகள் நேற்று தொடங்கப் பட்டது. இதில் ஓவியம், சிலம்பம், கீபோர்டு, வாய்ப்பாட்டு உள்ளிட்ட பல்வேறு திறன் சார்ந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்த பயிற்சியின் தொடக்க விழாவிற்கு சிறுவர் மன்ற திட்ட அலுவலர் பெ. பார்த்திபன் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் க.வாசு, ஆசிரியர் கோபிநாத், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் வரவேற்றார். மேலும் இந்த பல்திறன் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு மாணவர்களுடைய தனித் திறன்கள் வெளிப்படுத்தப் பட்டது. 15 நாட்கள் நடைபெறும் இந்த சிறப்பு பயிற்சி வகுப்பில் 48 மாணவர்கள் கலந்து கொண்டனர். தபேலா கலைஞர் ஜேம்ஸ், ஓவிய ஆசிரியர் ரமேஷ், சிலம்பம் பயிற்சியாளர்கள் பெரியசாமி, சதீஷ் உள்ளிட்டார் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் ஆசிரியை கண்மணி நன்றி கூறினார்.

# சேலம் அப்பா பைத்தியம் சாமி ஜீவசமாதிக்கு புறப்பட்ட முதல்வர் ரங்கசாமி

புதுச்சேரி: மே.7–

பதவியேற்பு தினத்தை முன்னிட்டு, அமைச்சர்களை முடிவு செய்ய முதல்வர் ரங்கசாமி சேலம் அப்பா பைத்தியம் சாமி ஜீவசமாதிக்கு புறப்பட்டார்.

புதுவை முதல்வர் ரங்கசாமி தீவிரமான முருக பக்தர். ஆன்மிகவாதியான இவர், ஜோதிட அடிப்படையில் முடிவுகளை எடுப்பார். தனது ஆன்மிக குருவாக அப்பா பைத்தியம் சாமிகளை ஏற்றுள்ளார். அவருக்காக கோரிமேட்டில் தனது வீட்டின் வளாகத்திலேயே திருக்கோயில் கட்டியுள்ளார். சனிக்கிழமை தோறும் இக்கோயிலில் பூஜை செய்து அன்னதானம் வழங்கப்படுகிறது.

வழக்கமாக தேர்தல் காலங்களில் முதல்வர் ரங்கசாமி சேலத்திலுள்ள ஸ்ரீ சற்குரு அப்பா பைத்தியம் சாமிகளின் ஜீவ சமாதிக்கு சென்று வழிபடுவார். அங்குதான் வேட்பாளர்கள், கூட்டணி, வேட்பு மனு தாக்கல் தேதி முடிவு செய்தார். அதேபோல் திருச்செந்தூர் முருகன் கோயில், மதுரை மீனாட்சி கோயிலுக்கும் சென்று வழிபட்டார். தேர்தலுக்கு முன்பு சென்று முடிவுகளை எடுத்து தற்போது தேர்தலில் வென்று 5வது முறையாக முதல்வராகிறார்.

அவருடன் பேச மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா ஆகியோர் புதுச்சேரி வந்து நேரம் கேட்டுள்ள நிலையில் நேற்று காலை முதல்வர் ரங்கசாமி ஆன்மிக பயணம் புறப்பட்டார். அவருடன் என்.ஆர்.காங்கிரஸ் எம்எல்ஏக்கள், நிர்வாகிகளும் புறப்பட்டனர். இதுதொடர்பாக என்ஆர் காங்கிரஸ் தரப்பில் கேட்டதற்கு, "சேலம் அப்பா பைத்திய சாமி ஜீவசமாதி சென்று வணங்குகிறார்.

அங்குள்ள அப்பா பைத்தியம் சாமிக்கு பிடித்தமான மேரி பிஸ்கெட், ஜாங்கிரி ஆகியவற்றை படைத்து வழிபடுவார். அங்கு பதவியேற்பு நாள், நேரம் கணிக்கிறார். அமைச்சர்களையும் முடிவு செய்யும் முக்கிய முடிவுகளை எடுக்கிறார். தொடர்ந்து பொள்ளாச்சி வேட்டைக்காரபுத்தூர் சென்று அழுக்கு சித்தரையும் வழிபடுகிறார். இதன்பிறகு புதுச்சேரி திரும்புகிறார். அடுத்து திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கும் செல்லவும் வாய்ப்புள்ளது." என்றனர்.

# வேலூர் மாவட்டத்திற்கு மே 15ம் தேதி உள்ளூர் விடுமுறை:

வேலூர்: மே.7–

வேலூர் மாவட்டத்துக்கு மே 15ம் தேதி உள்ளூர் விடுமுறை என மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி அறிவித்தார். தமிழகத்தில் மிகவும் பிரபலமான திருவிழாக்களில் வேலூர் மாவட்டம் குடியாத்தம் கெங்கையம்மன் கோவில் சிரசு திருவிழா முக்கியமான ஒன்றாகும். திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற காப்பு கட்டும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து 15 நாள்களுக்கு கோவிலில் தினமும் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெறும். முக்கிய நிகழ்ச்சிகளாக வரும் 11 ஆம் தேதி அம்மன் திருக் கல்யாணமும், 14 ஆம் தேதி தேரோட்டமும், 15 ஆம் தேதி அம்மன் சிரசு திருவிழாவும், 16 ஆம் தேதி மஞ்சள் நீராட்டு விழாவும், 17 ஆம் தேதி பூ பல்லக்கும், 22 ஆம் தேதி விடையாற்றி உற்சவமும் நடைபெறவுள்ளது. சமூகமேம்பாடு

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி வெளியிட்ட அறிவிப்பில்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஸ்ரீ கெங்கையம்மன் கோவில் சிரசு ஊர்வலத் திருவிழா மே 15ல் நடைபெறவுள்ளது. பொதுமக்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொள்ள வசதியாக, சிரசு ஊர்வலத் திருவிழா நடைபெறும் நாளான வருகிற 15ம் தேதி வேலூர் மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக உருவெடுத்து வரும் குப்பை கிடங்கு



கிருஷ்ணகிரி பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் புதியதாக உருவெடுத்து வரும் குப்பை கிடங்கு தேசிய நெடுஞ்சாலையில் தினமும் கொட்டப்பட்டு வரும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு கால்நடை விலங்குகள் நோய் தொற்றால் அவதி வாகன ஓட்டிகள் மூக்கை பிடித்து செல்லும் அவலம்.

# தமிழ்நாடு அனைத்து தொழிலாளர் நல வாரிய சங்க மேல்மலையனூர் ஒன்றிய அலுவலகம் திறப்பு



விழுப்புரம்.மே.07

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில், தமிழ்நாடு அனைத்து தொழிலாளர் நல வாரிய சங்கத்தின் புதிய மேல்மலையனூர் ஒன்றிய அலுவலக திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

சிறப்பு அழைப்பாளராக கவுன்சிலர் யசோதா சந்திரகுப்தா கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்.

நிகழ்வில் மாநில தலைவர் ஜிகிலிஹிதி நாகராஜன், மாநில பொதுச் செயலாளர் கே.வி. திருப்பதி, மாவட்ட தலைவர் செல்வகுமார், மாவட்டச் செயலாளர் திவ்யா, ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் புஷ்பலதா, வல்லம் ஒன்றிய செயலாளர் வித்யா, விக்கிரவாண்டி ஒன்றிய செயலாளர் ஞான ஒளி, கண்டாச்சிபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# பவானிசாகர் தொகுதியில் புதிய முகம் வேட்பாளர் தமிழ்ச்செல்வி அபாரம்... புதிய சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்று வெற்றி பெற்ற வீராங்கனை...



ஈரோடு. மே. 07

நடைபெற்று முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் பவானிசாகர் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்டு புதிய சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்று அபார வெற்றி பெற்றுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற்ற முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் முதல் முறையாக தேர்தலை சந்தித்தது. தமிழ்நாடு முழுவதும் வேட்பாளர்களை நிறுத்தி இருந்த நிலையில் அவர்களின் பெரும்பான்மையோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டம் பவானிசாகர் சட்டமன்ற தொகுதிக்கு தமிழக வெற்றிக்கழக வேட்பாளராக தமிழ்செல்வி என்ற பெண் வேட்பாளர் அறிவிக்கப்பட்டார்.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் தமிழ்ச்செல்வி தொகுதிக்கும் புதியவர், அவர் கொண்டு சென்ற விசில் சின்னமும் மக்களுக்கும் புதியது.

இருந்தபோதிலும் பவானிசாகர் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்த அதிமுக வேட்பாளர் பன்னாரி மற்றும் திமுக கூட்டணியின் சிபிஐ வேட்பாளர் சுந்தரம் ஆகியோரையும் பெண்ணுக்கு தள்ளி மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளார்.

பண்ணாரி மற்றும் சுந்தரம் பவானிசாகர் தொகுதியில் நன்கு அறிமுகமான நபர்களாக இருந்து வந்த நிலையிலும், புதிய முகமாக களம் இறங்கிய தவெக வேட்பாளர் தமிழ்ச்செல்வி தனது விசில் சின்னத்தை மக்களிடையே எடுத்துச் சென்று, பெரிய அளவில் விசிலை ஊத செய்துள்ளார்.

இவர் மடப்புரம் கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்த நிலையில் படுகொலை செய்யப்பட்ட சதீஷ் குமாருக்கு நெருங்கிய உறவினர் என்பது கூடுதல் தகவல்.

வெற்றி பெற்ற தமிழ்ச்செல்வி வெற்றி சான்றிதழை பெற்றுக் கொண்டு சென்னை சென்று கட்சியின் தலைவர் விஜயை சந்தித்து ஆசி பெற்றார்.

# தூத்துக்குடி எஸ்.பி. பெயரில் பண மோசடி

தூத்துக்குடி: மே.7–

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் பெயரில் போலி முகநூல் கணக்கு தொடங்கி பண மோசடி என புகார் அளிக்கப்பட்டார். புகார் தொடர்பாக தூத்துக்குடி சைபர் கிரைம் போலீசார் வழக்கு பதிந்து குற்றவாளிகளை தேடி வருகின்றனர். பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என காவல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நீர் நிலைகளில் தேங்கி நிற்கும் ஆகாய தாமரை



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் பின்புறம் உள்ள ஏரியில் படர்ந்து கிடக்கும் ஆகாய தாமரை பல முறை செய்தி வெளியிட்டும் நடவடிக்கை எடுக்காமல் அதிகாரிகள் அலட்சியம்.

# திருவள்ளூர் மாவட்ட பிரிவு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டு விடுதி மாணவ, மாணவிகள் சேர்க்கை : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் மே 07 :

பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவியர்கள் விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப, அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 28 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இவ்விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான விண்ணப்ப படிவம் 08.04.2026 முதல் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விளையாட்டு விடுதியில் சேரவிருப்பமுள்ள 6, 7, 8, 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணபத்தினை பூர்த்தி செய்து பதிவு ஏற்றம் செய்வதற்கான கடைசி நாள்: 06.05.2026 அன்று மாலை 6.00 மணி ஆகும். தேர்வுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ,மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் வருகின்ற 07.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் மாணவர்களுக்கும். 08.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் மாணவிகளுக்கும் கீழ்காணும் விவரப்படி நடைபெற இருப்பதால் ஆன்லைனில் விண்ணப்பித்தவர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

அதன்படி தடகளம் (மாணவர்கள் ,மாணவியர்கள்), கூடைப்பந்து (மாணவர்கள் , மாணவியர்கள் ),கால்பந்து (மாணவர்கள் , மாணவியர்கள்). வளைகோல் பந்து (மாணவர்கள் , மாணவியர்கள்), கபடி (மாணவர்கள் , மாணவியர்கள்), கையுந்து பந்து ( மாணவர்கள் , மாணவியர்கள்), கிரிக்கெட் ( மாணவர்கள் மட்டும்), கைப்பந்து ( மாணவர்கள் , மாணவியர்கள்) மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், திருவள்ளூர்.

மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்: மாணவர்கள் 07.05.2026 அன்று காலை 7 மணி முதல், மாணவிகள் 08.05.2026 அன்று காலை 7 மணி முதல். மாவட்ட அளவிலான தேர்வில் சிறப்பாக செயல்பட்டவர்கள் மாநில அளவிலான தேர்வுக்கு தகுதி பெறுவர், அதன் விவரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in எனும் அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

மேலும் கீழ்காணும் விளையாட்டுகளுக்கு நேரடியாக மாநில அளவிலான தேர்வு போட்டிகள் 12.05.2026 அன்று வாள் விளையாட்டு (மாணவர்கள் , மாணவியர்கள்),ஜூடோ (மாணவர்கள், மாணவியர்கள்),குத்துச்சண்டை (மாணவர்கள்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை, மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்: 12.05.2026 அன்று காலை 7 மணி முதல்

விளையாட்டு: குத்துச்சண்டை ( மாணவிகள் ), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்:ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை, மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7 மணி முதல் விளையாட்டு:பளுதூக்குதல் (மாணவர்கள், மாணவியர்கள்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: அன்னை சத்யா விளையாட்டரங்கம், தஞ்சாவூர்,மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7 மணி முதல்.

விளையாட்டு: ¾௦( மாணவர்கள்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்:அண்ணா விளையாட்டரங்கம், திருச்சி, மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7.00 மணி முதல் விளையாட்டு: நீச்சல் (மாணவர்கள் , மாணவியர்கள்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்:கிநிஙி சிஷீனீஜீறீமீஜ், வேளச்சேரி, சென்னை, மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7 மணி முதல்

விளையாட்டு:மல்யுத்தம் (மாணவர்கள் மட்டும்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், கடலூர், மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7 மணி முதல் விளையாட்டு:டேக்வாண்டோ (மாணவர்கள், மாணவியர்கள்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், கிருஷ்ணகிரி, மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7.00 மணி முதல்

மல்லர் கம்பம் ( மாணவர்கள் , மாணவியர்கள்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்:மாவட்ட விளையாட்டரங்கம், விழுப்புரம், மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7மணி முதல் விளையாட்டு:ஸ்குவாஷ்( மாணவர்கள் மட்டும்), நேரடி மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் இடம்:ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை, மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும் நாள் மற்றும் நேரம்:12.05.2026 அன்று காலை 7 மணி முதல்

தேர்வு போட்டியில் கலந்து கொள்ள வருகிறவர்களுக்கு தங்குமிட வசதி, பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்பட மாட்டாது. ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் மற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். அனைவரும் விளையாட்டு விடுதி தேர்வு போட்டியில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

# ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் தமிழக முதல்வராக பதவி ஏற்க்க வாழ்த்துக்கள்

புதுச்சேரி, மே. 7–



புதுச்சேரி 6.5.2026 ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் தமிழக வெற்றிக் கழக தலைவர் நாளைய தமிழக முதலமைச்சர் திரு விஜய் அவர்களுக்கு தமிழகத்தில் ஆயிரம் எதிற்ப்புகள் ஆயிரம் அவதூறுகள் 41 உயிர் தியாகங்கள் இவை அணைத்தையும் தண் மணதில் பெறும் சுமையாக தாங்கிக்கொண்டு தமிழகத்தில் கடந்த 40 ஆண்டுக்கு பிறகு ஒரு தணி மனிதனாக அசைக்க முடியாத மாபெறும் சக்தியாக வெற்றி பெற்று கம்பீரமாக ஆட்சி அமைத்து தமிழக மக்களை தலைநிமிரச்செய்து தமிழகத்தின் முதலமைச்சராக மிகை விறைவில் பதவி ஏற்று மேலும் மக்கள் சேவையை தொடர்ந்து செய்திட புதுச்சேரி ஏழை மக்கள் கழகம் அனைவரின் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெறிவித்துக்கொள்கின்றோம் என்றும் அன்புடன் ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் தெரிவித்தனர்.

# வணிகர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு சட்டம் அமல்படுத்த வேண்டும்: விக்கிரமராஜா பேட்டி

திருவாரூர்: மே.7–

வணிகர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு சட்டம் அமல்படுத்திட வேண்டும் என விக்கிரமராஜா கூறியுள்ளார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் 43வது வணிகர்தின எழுச்சி மாநாடு திருவாரூரில் நேற்று நடை பெற்றது. முன்னதாக மாநில தலைவர் விக்கிரமராஜா, மாநாட்டு பந்தலில் சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது: வியாபாரிகள் மீதான அதிகாரிகளின் அத்துமீறல்களை தடுப்பதற்கும், கார்ப்பரேட் கம்பெனிகளை அப்புறப்படுத்துகின்ற பணியையும் பேரமைப்பு தொடர்ந்து செய்து வருகிறது. மாவட்டசெய்திகள்


தமிழக தேர்தலில் புதிய கட்சி ஒன்றுக்கு மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். புதிய அரசு அமைந்த பின்னர் முதல்வரிடம் தமிழகம் முழுவதும் உள்ள வியாபாரிகளுக்கு அரசு பாதுகாப்பு தர வேண்டும். கார்ப்பரேட் கம்பெனிகள் ஆன்லைன் வர்த்தகங்கள் ஆகியவற்றின் அத்துமீறல்களை எதிர்த்து தமிழ்நாடு வணிகர் சங்கம் போராடி வருவதால் வணிகர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். ஒன்றிய அரசு 4 அடுக்கு ஜிஎஸ்டி வரியை 2 அடுக்காக குறைத்ததை போல ஒரே வரியாக மாற்ற வேண்டும். அந்நிய நாட்டு ஆன்லைன் வர்த்தகங்களை தடை செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயலாற்றுவோம்: சீமான் உறுதி

சென்னை: மே.7–

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் தமிழர் கட்சி செயலாற்றும் என்று அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:



அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வாக்களித்த அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றிபெற்ற அனைத்து சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், பொறுப்பேற்கவுள்ள விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழக புதிய அரசுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழகம் எனும் தாய் நிலத்தின் நலனுக்காகவும், உயர்வுக்காகவும் தொடர்ச்சியாக களப்பணியாற்றி, மண்ணுக்கும், மக்களுக்குமான ஆக்கப்பூர்வ மாற்று அரசியலை பொறுப்புள்ள எதிர்க்கட்சியாய் நின்று நாம் தமிழர் கட்சி செயலாற்றும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தோல்வி குறித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2021ம் ஆண்டு கட்சி நிர்வாகிகள், வேட்பாளர்களுடன் கண்கலங்கியபடி பேசிய பழைய காணொளி பதிவு தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி பரவி வருகிறது.

“நான் வென்று சட்டப்பேரவைக்குள் செல்லவேண்டும் என்று எனக்கு விருப்பமில்லை. நாட்டை வெல்லாமல், ஒரு சில சீட்டுகளை வெல்வதில் ஒன்றும் ஆக போவதில்லை. ஆனாலும் வென்று உள்ளே போயிருக்கலாம். மக்களின் குரலாக ஒலித்திருக்கலாம்.

இது நம் தோல்வி அல்ல. மக்களின் தோல்வி.” என்று அதில் சீமான் பேசியிருப்பது தற்போது நெட்டிசன்களிடையே பேசும் பொருளாகி இருக்கிறது.

# போச்சம்பள்ளி அருகே மூன்று மாதமாக குடிநீர் வழங்காததை கண்டித்து 50க்கும் மேற்பட்ட பெண்கள் சாலை மறியல் போராட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த குடிமேனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட குடிமேனஹள்ளி கிராமத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடுகள் உள்ளன. கிராமத்தில் கடந்த மூன்று மாத காலமாக தென்பெண்ணை ஆற்று குடிநீர் மற்றும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் ஆகிய எந்த குடிநீரும் வழங்கப்படாமல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. தேர்தல் முடிந்தவுடன் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஊராட்சி செயலாளர் உறுதியளித்திருந்த நிலையில், தொடர்ந்து குடிநீர் வராத காரணத்தால் கிராமத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண்கள், அகரம் சாலையில் காலி குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டனர். விபரம் அறிந்து விரைந்து வந்த பாரூர் காவல்துறையினர் கிராம பெண்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி நாளைக்குள் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததை அடுத்து பெண்கள் கலைந்து சென்றனர். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற சாலை மறியலால் நகரப் பேருந்து அங்கிருந்து செல்ல முடியாமல் நிறுத்தப்பட்டது.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் மறுமலர்ச்சி திமுக 33ஆம் ஆண்டு கழகக் கொடியேற்று விழா

## கழகத்தினர் அதிர்வேட்டுகள் வெடித்து கொண்டாடினார்கள்.





திருச்சி, மே.7

மறுமலர்ச்சி திமுக 33ஆம் ஆண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு நேற்று (06.05.2026) திருச்சி தெற்கு மாவட்ட மறுமலர்ச்சி திமுக சார்பில் மணப்பாறை நகரம், மணப்பாறை வடக்கு ஒன்றியம், கண்ணுடையான் பட்டி, திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம், வேங்கூர் ஆகிய ஊர்களில் கழகக் கொடியேற்றி அனைவருக்கும் பொங்கல் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு உள்பட்ட மணப்பாறை நகரத்தில், பேருந்து நிலையம் அண்ணா சிலையருகில் நடந்த நிகழ்விற்கு நகரச் செயலாளர் எம்.கே. முத்துப்பாண்டி தலைமை வகித்தார்.

மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் அவர்கள் கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார்.

நிகழ்வில் மாநில விவசாய அணி துணைச்செயலாளர் ஆ.துரைராஜ், மாநில கலைத்துறை துணைச் செயலாளர் மேட்டுக்கடை பொ.சண்முகம், மணப்பாறை வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.சுப்ரமணியன், மணிகண்டம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆரோக்கிய ரெக்ஸ் தனராஜ், பொதுக்குழு உறுப்பினர் பா. பாதுஷா, மருங்காபுரி வடக்கு ஒன்றியச் செயலாளர் நெல்லிப்பட்டி வி.குமரேசன், மணப்பாறை நகரப் பொருளாளர் யூ. சிராஜ்தீன், மாவட்டப் பிரதிநிதிகள் வாசு. நெடுஞ்செழியன், தோ.சுப்பையா, நகர துணைச் செயலாளர் பழ.காயாம்பு, நகர செயற்குழு உறுப்பினர் ரியல் நாராயணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி மணப்பாறை வடக்கு ஒன்றியம், கண்ணுடையான் பட்டியில் நடந்த விழாவிற்கு ஒன்றியச் செயலாளர் ப.சுப்ரமணியன் தலைமை வகித்தார்.

கழகக் கொடியினை மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் அவர்கள் ஏற்றி அனைவருக்கும் பொங்கல் வழங்கினார்.

நிகழ்வில் மாநில சிறுபான்மைப் பிரிவு துணைச் செயலாளர் பீட்டர் (எ) ஆரோக்கியசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆ.வேளாங் கண்ணி, மாநில கலைத்துறை துணைச் செயலாளர் மேட்டுக்கடை பொ.சண் முகம், மருங்காபுரி வடக்கு ஒன்றியச் செயலாளர் நெல்லிப்பட்டி வி.குமரேசன், மணிகண்டம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆரோக்கிய ரெக்ஸ் தனராஜ், மாவட்டப் பிரதிநிதி தோ.சுப்பையா, கிளைச் செயலாளர்கள் கங்கா சுப்ரமணி, சடையன், ராஜாளிபட்டி கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து, திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம், வேங்கூர் ஊராட்சியில் நடந்த விழாவிற்கு ஒன்றியச் செயலாளர் மு.திருமாவளவன் தலைமை வகித்தார்.

நிகழ்வில் பங்கேற்று மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் அவர்கள் பங்கேற்று கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் எம்.ஆர்.பாலுசாமி, மாவட்ட துணைச் செயலாளர் திருமதி புஷ்பா சுப்ரமணியன், திருவெறும்பூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் சி.பீட்டர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஹென்றி சின்னப்பன், மணப்பாறை வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.சுப்ரமணியன், மருங்காபுரி வடக்கு ஒன்றியச் செயலாளர் நெல்லிப்பட்டி வி.குமரேசன், வேங்கூர் செல்வராஜ், சம்பத், சுரேஷ், நடராஜபுரம் அய்யாவு, புதுத்தெரு அசோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கோபிசெட்டிபாளையம் செங்கோட்டையனின் கோட்டை.. 10வது முறையாக தொடர்ந்து வெற்றி பெற்று சாதனை...



ஈரோடு. மே.07

கோபிசெட்டிபாளையம் தொகுதி செங்கோட்டையனின், செங்கோட்டைகு என்பதை இந்த முறையும் நிரூபித்துக் காட்டியுள்ளார் முன்னாள் அமைச்சர் கே. ஏ செங்கோட்டையன்.

மேற்கு மண்டலத்தில் செழிப்புமிக்க தொகுதியாக விளங்குவது கோபிசெட்டி பாளையம். இங்கு தொடர்ந்து பத்தாவது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார் முன்னாள் அமைச்சர் கே ஏ செங்கோட்டையன்.

அதிமுகவில் மறைந்த முதல்வர் எம்ஜிஆர் காலம் தொட்டு, மறைந்த முதல்வர் ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆட்சி வரை அமைச்சராக பதவி வகித்து, கொங்கு மண்டலத்தில் அதிமுகவில் தனிப்பெரும் தலைவராக பலவந்தவர் செங்கோட்டையன்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும், செங்கோட்டையனுக்கும் ஏற்பட்ட கருத்து வேறு பாட்டால், செங்கோட்டையில் அதிமுகவில் இருந்து விலகி புதியதாக துவக்கப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

கோபிசெட்டிபாளையம் என்றாலே அந்தக் காலம் தொட்டு அது செங்கோட்டைய னின் செங்கோட்டை என்றே அறியப்பட்டது.

தற்போது நடிகர் விஜய் புதிய கட்சி ஆரம்பித்த நிலையில் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கட்சி பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழக வெற்றி கழகம் சார்பில், கோபிச்செட்டிபாளையத்தில் விசில் சின்னத்தில் போட்டி யிட்டு பத்தாவது முறையாக மிகப் பிரமாண்டமான வெற்றியை பெற்றுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தில் இவருக்கு தலைமை ஒருங்கிணைப்பு குழு பொறுப்பாளராக பதவி வழங்க ப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, செங்கோட்டை யனை மிகக் கடுமையாக சாடினார். அப்போது அவர் உனக்கு அரசியல் வாழ்க்கை அஸ்தமத்து விட்டது என்று செங்கோட்டையனுக்கு சாபமிட்டார்.

இதற்கெல்லாம் அமைதி காத்து வந்த கே ஏ செங் கோட்டையன் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில், தமிழக வெற்றி கழகம் சார்பில் கோபிசெட்டிபாளையத்தில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜயின் நம்பிக்கைக்கு உரிய மூத்த தலைவராக இருந்து வரும் செங் கோட்டையன் அந்தக் கட்சியில் மிக முக்கிய தலைவராக விளங்குகிறார்.

நிலையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் விஜயன் தமிழக வெற்றிக்கழகம் கூடுதல் தொகுதிகள் பெற்று ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் அமைச்சரவையில் செங்கோட்டையனுக்கு முக்கிய இலாகா ஒதுக்கப்படும் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்ட கே ஏ செங்கோட்டையன், 82. 612 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர என் நல்லசிவம் 65. 992 வாக்குகளையும், அதிமுக சார்பில் போட்டியிட்ட பிரபு 56. 232 வாக்குகளையும் பெற்றனர்.

இந்தத் தேர்தலோடு அரசியலை விட்டு காணாமல் போய் விடுவாய் செங்கோட்டையா... என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரத்தில் பேசிய நிலையில், அந்த கட்சியின் வேட்பாளர் பிரபு மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற செங்கோட்டையன் வெற்றி சான்றிதழை பெற்றுக்கொண்டு சென்னை சென்று கட்சியின் தலைவர் விஜய் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவளிப்பது எங்கள் முதுகில் குத்தும் செயல்: திமுக

சென்னை: மே.7–

தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என காங்கிரஸ் எடுத்துள்ள முடிவு, திமுகவின் முதுகில் குத்தும் செயல் என்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சரவணன் அண்ணாதுரை விமர்சித் துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள சரவணன் அண்ணாதுரை, “தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என்ற முடிவை காங்கிரஸ் கட்சி எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாடு மிகவும் குறுகிய பார்வை கொண்டது; தொலைநோக்குப் பார்வை அற்றது. இப்படி ஒரு முடிவை எடுப்பதற்காக அவர்கள் வருந்த நேரிடும்.

2029 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த தேர்தலில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்றிவிட முடியும் என நாங்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால், காங்கிரஸ் இப்போது எடுத்துள்ள இந்த முடிவு காரணமாக, அவர்கள் ஒரு நிலையற்ற கூட்டணி கட்சியாக மாறிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சியை நம்ப முடியாது என்ற ஒரு கருத்து நாடு முழுவதும் பரவியுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு நாள்தான் ஆகிறது. அதற்குள் காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு அளிக்க முடிவு செய்திருப்பது, முதுகில் குத்தும் செயல். பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் ஆகியவற்றுக்கு இடம்கொடுக்க விரும்பவில்லை என்றும் எனவே இந்த முடிவை எடுப்பதாகவும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இந்த முடிவை காங்கிரஸ் கட்சி முழு மனதுடன் எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த முடிவு (இண்டியா) கூட்டணியில் உள்ள பிற கட்சிகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும். மக்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராக அவர்கள் செயல்படுகிறார்கள் என்றால், அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ், உத்தவ் தாக்கரே உள்ளிட்ட தலைவர்களின் மனதில் இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? நாங்கள் ஒருபோதும் காங்கிரஸ் கட்சியை ஏமாற்றியதில்லை.

2016ம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கணிசமான வெற்றியை அக்கட்சி பெற்றது. அப்போது, பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் தரப்பினர், ராகுல் காந்தியை கேவலமாக விமர்சித்தனர். அந்த சூழலில், எங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாள ராக முன்னிறுத்தினார். அது ஒரு துணிச்சலான நடவடிக்கையாக அமைந்தது. அங்கிருந்துதான் 2024 தேர்தலில் ராகுல் காந்தியின் செல்வாக்கு உயர்ந்தது. இவை அனைத்தும் திமுகவின் கடின உழைப்பாலும் அது செலவிட்ட வளங்களாலுமே சாத்தியமானது. அதனால்தான், அவர்களால் இப்போது ஐந்து தொகுதிகளில் வெற்றி பெற முடிந்தது.

தவெக பெரும்பான்மை இலக்கை எட்ட 11 இடங்கள் தேவைப்படுகின்றன. 47 இடங்களைக் கொண்டுள்ள அதிமுக நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயராக இருக்கிறது. நீங்கள் விஜய்யாக இருந்தால் யாருடைய பேச்சைக் கேட்பீர்கள்? ஐந்து இடங்களைக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியையா அல்லது 47 இடங்களைக் கொண்டுள்ள அதிமுகவையா? காங்கிரஸ் கட்சி மிகத் தவறான ஒரு முடிவை எடுத்துவிட்டதாக நான் கருதுகிறேன்” என தெரிவித்துள்ளார்.

# போச்சம்பள்ளி அருகே திமுக கம்பத்தில் தவெக கொடியேற்றியதால் பரபரப்பு

## திமுகவினர் திரண்டதால் போலீசார் குவிப்பு







கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திமுக கட்சியை சேர்ந்த வெண்ணிலா முருகேசன் என்பவர் அவரது சொந்த விவசாய நிலத்தின் ஓரத்தில் திமுகவின் கொடி கம்பம் நடப்பட்டு இருந்தது. 2026 சட்டமன்ற தேர்தல் காரணமாக கம்பத்திலிருந்து திமுக கொடி அகற்றப்பட்டு இருந்தது. சட்டமன்ற தேர்தலில் திமுக மற்றும் அதிமுக தோல்வியை சந்தித்த நிலையில் தவெக கட்சியினர் வெற்றியை கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் தனி நபரின் பட்டா நிலத்தில் அமைந்துள்ள திமுக கொடி கம்பத்தில் நேற்று இரவு அடையாளம் தெரியாத நபர் திமுக கொடிக்கம்பத்தில் தவேக கொடியை ஏற்றியுள்ளார். நேற்று காலை வந்து பார்த்தபோது கொடிக்கம்பத்தில் தாவெக கொடி இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து அங்கு திமுகவினர் 100க்கும் மேற்பட்டோர் குவியத் தொடங்கினர். விவரம் அறிந்து விரைந்து வந்த பாரூர் போலீசார் திமுக கட்சியினரிடையே பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இரவோடு இரவாக கொடியை ஏற்றிய மர்ம நபரை கைது செய்யும் வரை கொடியை அகற்றக் கூடாது என திமுகவினர் கோரிக்கை வைத்துள்ளனர். சம்பவ இடத்தில் பதட்டமான சூழல் நிலவுவதால் 20க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் நடிகர் ரஜினிகாந்த் சந்திப்பு!

சென்னை. மே.7–

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில், மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க கூட்டணி தோல்வி யடைந்து ஆட்சியை இழந்தது. இத்தேர்தலில் தி.மு.க கூட்டணி 72 இடங்களைப் பெற்று பின்னடைவைச் சந்தித்ததுடன், பல முக்கிய அமைச்சர்களும் தோல்வியைத் தழுவினர்.



இதனிடையே திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறியுள்ளது. இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியானது முதல் கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஸ்டாலினைச் சந்தித்து வரும் நிலையில், நேற்று சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் நடிகர் ரஜினிகாந்த் அவரை நேரில் சந்தித்துப் பேசினார். ஸ்டாலின் குடும்பத்தினருக்கு மிகவும் நெருக்கமான வரான ரஜினிகாந்த், இந்த இக்கட்டான தருணத்தில் அவருக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் செயல்பட்டுள்ளார். இந்த சந்திப்பின் போது ரஜினிகாந்த் ஸ்டாலினிடம் பேசுகையில், “வெற்றி பெறும் நேரத்தில் மட்டுமல்ல, இக்கட்டான சூழலிலும் நான் உங்களுடன் இருப்பேன்” என்று கூறி இருக்கிறார்.

# மதிமுக 33 வது ஆண்டு துவக்க விழா...

## ஈரோடு மாநகர் மாவட்ட மதிமுக சார்பில் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது.



ஈரோடு. மே 07

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 33வது ஆண்டு விழா ஈரோட்டில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் என்ற அரசியல் கட்சியை மதிமுக பொதுச் செயலாளர் வைகோ 1993 ஆம் ஆண்டு துவக்கினார்.

பல்வேறு அரசியல் காலகட்டங்களை கடந்து 33வது ஆண்டு துவக்கு விழாவை அக்கட்சி தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடியது.

இதனை தொடர்ந்து ஈரோடு மாநகர் மாவட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முப்பத்தி மூணாவது ஆண்டு தொடக்க விழா மற்றும் கட்சி அலுவலகமான அண்ணா அறிவாலயம் அலுவலகம் முன்பு கட்சியின் கொடி ஏற்றப் பட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு மாநகர் மாவட்ட துணை செயலாளர் குணசேகரன் தலைமை வகித்தார். வீரப்ப சத்திரம் பகுதி கழக செயலாளர் தெய்வசிகாமணி கட்சி கொடி ஏற்றி வைத்தார்.

மாநகராட்சி மாவட்ட உறுப்பினர வனிதா மணி ஜெயக்குமார் இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் கதிர்வேல், பகுதி செயலாளர் காளிமுத்து, ஶ்ரீதர், ரவிக்குமார், ஜெயக்குமார், சென்னி மலை போரூர் செயலாளர் மோகனசுந்தரம், வேலுமஸ் மகேந்திரன், முசிறி ரவிச்சந்திரன், 46 புதூர் கார்த்தி உள்ளிட்ட ஏராளமான மதிமுகவினர் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA**, on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421